**ARTICLE 31 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00013**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 26–29
Received: 30 September 2026 • Accepted: 1 October 2026

# சோ தர்மனின் சூல் நாவல் குறிப்பிடும் வேளாண் பண்பாட்டுக் கூறுகள்

**ஐயப்பன் க[1,*], முனைவர் . கலா கோபி க[2]**

[1]முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை ,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி , சங்கரன்கோவில்., India
[2]இணைப்பேராசிரியர் , தமிழ்த்துறை ,அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சங்கரன்கோவில்., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** ஐயப்பன் க — iyyappanmuthamma@gmail.com

### ஆய்வுச் சுருக்கம்

சோ தர்மனின் சூல் நாவல் குறிப்பிடும் வேளாண் பண்பாட்டுக் கூறுகள்

**Keywords / திறவுச் சொற்கள்:** விதைகள்- கடலை விதை- வற்றல் விதை -பருத்தி விதை- உரம்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** க, ஐ., & க, மு. . க. கோ. (2026). சோ தர்மனின் சூல் நாவல் குறிப்பிடும் வேளாண் பண்பாட்டுக் கூறுகள். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 1, –.

## முன்னுரை

ஒவ்வொரு தாவரத்திற்கும் மூலமாக இருக்கக்கூடியது விதை . அந்த விதை என்பதனை வித்து அல்லது ' காழ்' என்று அழைப்பார்கள் . விதைகள் விவசாயத்திற்கும் தாவரத்திற்கும் மட்டுமல்ல தனிமனித உடல் நலத்தை பேணி காக்கக்கூடியது . விதைகள் பல்வேறு ஊட்டச்சத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது. நாம் விதைக்கக்கூடிய விதைகள் பொறுத்து பயிர்கள் முளைக்கும் தன்மை பெற்றிருக்கும் . வாழ்விலும் அதே போன்று தான் நாம் செய்யக்கூடிய செயல்களுக்கு தகுந்த விளைவுகள் நமக்கு வந்து சேரும். அது வினையாக இருந்தாலும் சரி திணையாக இருந்தாலும் சரி. இலக்கியம் என்பது வாழ்வை பிரதிபலிக்கக்கூடிய ஒரு கண்ணாடி. தகுந்த பருவம் அடைந்து உரிய காலத்தில் பயிர் செய்தால் உரிய விளைச்சல் வந்து சேரும் என்று முன்னோர்கள் வாக்கு. அதன் ,அடிப்படையில் "பருவத்தே பயிர் செய்"என்று ஆத்திச்சூடி வழி அவ்வையார் கூறுகிறார்.. அது போன்று சூல் நாவலில் வேளாண் குடி மக்களின் வாழ்வியலை சோ தர்மன் ஐயா அவர்கள் மிக அழகாக கூறியிருக்கிறார். சூல் நாவலில் வேளாண் பண்பாட்டுக் கூறுகள் என விவசாய பொதுமக்கள் பயன்படுத்திய கருவிகள் ,விலங்குகள், உரங்கள் ,விதைகள் ,நீர் மேலாண்மை அவை சார்ந்த சூழல்கள் போன்றவற்றிலிருந்து 'விதைகள்' பற்றிய தகவல்களை இக்கட்டுரையில் காண்போம். இந்த நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது சோ. தர்மன் ஐயா அவர்கள் வாங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## விதைக் கடலை உடைப்பு

கிராமப்புற பெண்கள் செய்யக்கூடிய வேலை. விதைக்கடலை உடைப்பு என்பது மிக கவனமுடன் செய்ய வேண்டிய ஒரு வேலை. விதைப்பு வேலைகளை கவனம் சிதறல் இருக்கக் கூடாது. ஒரு விதை , பல பயிரை

தரக்கூடியது. அதனை, "கடலைப்பருப்பின்மேல் மூடி இருக்கும் மெல்லிய சிவப்புத் தோலியில் லேசாக தாயம் பட்டாலும் கடலை செடி முளைக்காது"

இவ்வாறு பக்குவம் பார்த்து செய்யக்கூடிய வேலையாக விதைப்புக்குத் தேவையான விதையை உடைப்பது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன . வேலை செய்யக்கூடிய வேலையாட்களுக்கு சம்பளம் கொடுக்கப்படும். வேலை செய்பவர்களுக்கு சம்பளம் விதையின் உரிமையாளர் வழங்குவார். அனைவரும் தொழிலாளிகள் தான். அந்த தொழிலாளி தன் வீட்டு விதை உடைப்பு வேலைக்கு சக தொழிலாளர்களை வேலைக்கு அழைப்பது வழக்கம் . அப்போது நில உரிமையாளர் முதலாளியாக பார்க்கப்படுகிறார் . இதில் முக்கிய வேலை என்னவென்றால் விதைகளை யாரும் அளவுக்கு மீறி தின்று விடவோ, எடுத்துச் செல்லவோ கூடாது. மீறி நடக்காமல் கண்காணிப்பதே இவரது பெரும் வேலை.

## வற்றல் விதை

விவசாய குடி மக்கள் விவசாயத்திற்கு தேவையான விதைகளை தாங்களே தயாரித்துக் கொள்வது வழக்கம் . அதில் விதைக்கடலை உடைப்பது போல் வற்றல் விதைகளை பிரித்து எடுப்பது நாவலில் அழகாக கூறப்பட்டுள்ளது . வற்றல் விதை எடுப்பது விதைக்கடலை எடுப்பது போல் நுணுக்கமான வேலை இல்லை. காரத்தன்மை அதிகம் இருப்பதால் கையில் எரிச்சல், மூக்கில் நமநமக்கு உண்டாகும் புறையேறும் . அதனை, "தாங்கள் தோட்டங்களில் விளைந்த வாட்ட சாட்டமான மிளகாய் வற்றல்களை பிரித்து நன்றாக காய வைத்து தனியாக வைத்திருப்பார்கள். அதுதான் விதைவற்றல். வந்தவர்களை இரண்டாகப் பிரித்து விதைகளை விரித்து வைத்துள்ள துணிகளில் தட்டி தட்டி விலைத்தாட்டி சேகரிக்க வேண்டும்" என்று கூறப்படுகிறது . நன்றாக விளைந்த மிளகாய்களை சேகரிப்பதன் மூலம் அடுத்து பயிரிடப்பட்டு வளர்க்கப்படும் மிளகாய் நல்ல விளைச்சலைத் தரும் . வளர்ச்சி குறைவு, அழுகல் போன்ற மிளகாய்களை அப்புறப்படுத்தி இவ்வாறு தேர்வு செய்து சேமித்து எடுத்துக் கொள்வார்கள்.

## பருத்தி விதை

தற்போது வேளாண் தொழிலில் ஈடுபட வேண்டும் என்றால் பணம் மட்டும் போதுமானது, அனைத்தும் வந்து சேரும். முன்னர் காலத்தில் பருத்தி விதைகளை தனியாக பிரித்து எடுக்க வேண்டும். பருத்தியை ஆலையில் ஏற்றி , எடுத்து வரப்பட்ட பருத்தி கொட்டையில் மாட்டு தீவனம் போக மீதம் உள்ளதை எடுத்து வைக்க வேண்டும். அதில் அந்த விதையில் சிறு சிறு பஞ்சு ஒட்டிக் கொண்டிருக்கும். அதை எடுத்து பயிரிடும் போது தூவினால் ஒரே இடத்தில் பத்து பதினைந்து சேர்ந்து ஒன்றாக இருக்கும் . அவ்வாறு சேர்ந்து முளைத்தால் விளைத்தல் நன்றாக இருக்காது. அதற்காக விவசாய குடி பெருமக்கள் பருத்தி விதையை பண்படுத்த தொடங்குவார்கள் . அது என்னவென்றால் குளத்தில் மழைக்காலத்தில் செழுமையாக தண்ணீருடன் கரிசல் மண் கோடைகாலத்தில் காய்ந்தவுடன் வெடிப்புடன் குளத்தில் ஓரங்களில் இருக்கும் . அந்த கரிசல் மண்ணை எடுத்து வந்து நீரில் நன்றாக உழைத்து பிரித்து வைக்கப்பட்ட பருத்தி விதையை அதனுடன் கலக்கி எடுப்பார்கள் . ஒவ்வொன்றாக தனியாக எடுத்து ஒவ்வொருவரையும் தனியாக எடுத்து முற்றத்தில் காய வைத்து விடுவார்கள் . காய வைத்ததும் அது தனித்தனியாக கடலை போன்று காட்சி தரும் , அதை எடுத்து

விதைப்பது மூலம் பயிறு நன்றாக செழுமையாக வளரும். அந்த பருத்தி விதையுடன் உளுந்து மற்றும் பாசிப்பயறு ஊடுபயிராக விதைப்பார்கள் . அதில் பாசிப்பயிரை விதையாக ஓட்டினால் கொஞ்சம் வளர்ந்ததும் தாழ்ந்து படுத்து விடும் . அதனை "அடும்ப ராத்தி நெடுங்குடி அவரை" குறிஞ்சிப்பாட்டில் 87 ஆவது வரி உணர்த்துகிறது. நீண்ட நெடிய தாவரங்களில் பயிர் வகைகளில் அவரைச் செடியும் ஒன்று.

அவ்வாறு இல்லாமல் ஊடுபயிருக்கு தேவையான பயிராக இந்த உளுந்தை பயன்படுத்தினால் நன்றாக இருக்கும். இவ்வாறு பருத்தி விதைக்கு பல்வேறு கால சூழ்நிலைக்கு தகுந்தபடி இயற்கையாகவே அந்த விதையை தயாரிப்பது பண்பாட்டுக் கூறுகளாக தெரிகிறது. பருத்தி விதையை பயிரிடும் பொழுது மாட்டு வண்டியில் இருவர் அந்த விதையை போட வேண்டும் . அது பருத்தி விதை கருப்பு முத்து போன்ற காட்சி தரும். மாட்டு வண்டி கலப்பை மூன்று அது வந்து 'கொட்டான்' என்று சொல்வார்கள். 'பரசு 'அப்படிங்கிற ஒரு பகுதி உலகப்பகுதியில் அடுத்து மூடி இருக்கும் அது திரும்பும் போது அதை தூக்கி வைப்பதற்கு ஒரு நபர் தனியாக இருப்பார் அதுதான் நாவில் கூறப்படுகிறது.

"பருத்தி விதை எடுப்பது பருத்தி அறைக்கு கொடுத்து விதைகளை வாங்கிக் கொள்வார்கள் மாடுகளுக்கு போக நீதியை மாற்றுச்சான கரைசல் அல்லது களிமண் கரைசலுக்குள் போட்டு பறித்து விடைகளை நன்றாக கிண்டி பிசைந்து மூன்றத்தில் முற்றத்தில் படர்த்தி காய வைப்பார்கள் பிறகு விதைக்காக அள்ளி வைத்துக் கொள்வர்", என மக்கள் கூறுவதை பார்க்கையில் கிராமப்புற விவசாய சூழ்நிலை இவ்வாறு இருக்கும் என உணர்த்துகிறது.

## உரம்

கிராமப்புற விவசாய மக்களின் வாழ்வு நிலையை உயர்த்துவது என்பது மழை, விவசாயம், விளைச்சலுமே ஆகும். மழைப்பொழிவு அதிகமானாலும் குறைவானாலும் மண்பதம் சிதறி விடுகிறது. எல்லாம் சரியாக இருந்தாலும் மண்ணிற்கும், விதைக்கும் இன்றியமையாத ஒன்று உரம் . அதிக மற்றும் தரமான விளைச்சலைத் தரக்கூடியது. இன்றளவும் கிராமம் புறமக்கள் வீடுகளில் திண்ணை இருப்பதை நம்மால் பார்க்க முடிகிறது . அவை வீட்டுக்காரர்களும், வழிப்போக்கர்களும் உட்கார்ந்து செல்வதற்கு மட்டுமல்ல, அவை கோழிகள் வாழக்கூடிய வீடு 'கோழி மடம்' என்று அழைப்பார்கள். வீடு மாடுகளுக்கு 'தொழுவம்' இருப்பது போல் கோழிகளுக்கும் கோழி மடம். தொழுவத்திலிருந்து இருந்து சுத்தம் செய்யப்பட்ட கழிவுகளை குப்பை என்று அழைப்பார்கள். இதனை "கண்மாய்க்கரை மூடிவிட்டால் குப்பை எடுப்பு கரம்பை மண் கோடிகளுக்கு அடுத்து என்று கூறுகிறார் குப்பை குனி வரிசைகள் "என்று கூறுகிறான் நாவலாசிரியர். கண்மாயில் கிடக்கும் கரம்பை மண்ணை அள்ளிக்கொண்டு காடுகளில் குவித்து வைத்து கொள்வார்கள். அருகில் குப்பை குவியல் . இவைகளை பரப்பி விட்டு கோடை உளைவும் நடைபெறும் . நல்ல விளைச்சலுக்கு உகந்த வேலைப்பாடு இதுவாகும். அதேபோல் கோழி மடம் வைத்திருப்பவர்கள், அதன் கழிவை ஒரு மூட்டையில் வைத்து பண்ணை விவசாயம் செய்வார் செய்பவர்களுக்கு விற்று விடுவார்கள் . ஊரில் அதிக கோழி வைத்திருப்பவர்களிடம் பண்ணை தொழில் செய்பவர்கள் ஒரு

வருடத்திற்கு தேவையான கழிவை வாங்க முன்பணம் கொடுத்து செல்வது வழக்கமாகும் .

## முடிவுரை

விவசாயத் தொழிலில் விதை பற்றிய குறிப்புகளை சோ. தர்மன் ஐயா அவர்கள் நேர்த்தியாக மக்களுக்கு தன்னுடைய படைப்பான சூழ் நாவலில் கூறியிருக்கிறார் . விவசாயத்தில் மனிதர்கள் தன் பெற்ற பிள்ளைகளை கண்ணும் கருத்துமாக பார்த்து கவனித்து கரைதேர்த்து விடுவது போல ஒவ்வொரு விதைகளையும் அதன் குணநலக் குன்றாமல் பாதுகாத்து பக்குவப்படுத்தி ,நுணுக்கமான வேலைகளை கவனமாக பார்த்து விளைச்சலில் ஈடுபடுத்துவது, வளர்த்தெடுப்பது என்று பொறுமையும், கடமையும் அவர்களின் உழைப்பும் நமக்கு தெரிகிறது . அவ்வாறான விவசாயத்தில் அவர்களின் ஈடுபாடு அன்பு சார்ந்து வரக்கூடியது. அதன்படி பல்வேறு வேளாண் சார்ந்த நம்பிக்கைகளை விடுத்து விதை சார்ந்த உண்மை தகவல்களை எடுத்து கூறி இருக்கிறார். அடுத்த தலைமுறை விவசாயத்துக்கு எடுத்து செல்லக்கூடிய மாபெரும் ஊடகம் சூழ் நாவல்.

மேற்கோள்
1) நூல் : நீதி நூல்கள்
ஆசிரியர்: அரசு
பதிப்பகம் : கங்கை புத்தகம் நிலையம்
டி நகர் சென்னை 17.

21 ஆம் பதிப்பு: பிப்ரவரி 2020
2) நூல். :சூல்
ஆசிரியர்: சோ தர்மன்
பதிப்பு : 5 ...2016.

வெளியீடு : அடையாளம் பதிப்பகம்
3) நூல்: சங்க இலக்கியம்
உரையாசிரியர்: சாவே சுப்பிரமணியம்.

© 2026 ஐயப்பன் க, முனைவர் . கலா கோபி க. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..